## மருத்துவமனையில் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து

# கரூரில் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆறுதல்!

## அரசின் நிவாரணத்தொகை தலா ரூ.10 லட்சத்தை வழங்கினார்!








கரூரில் த.வெ.க. கட்சித் தலைவரின் பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்த 40 பேரின் குடும்பத்திற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில், தலா ரூ. 10 லட்சம் நிவாரண நிதிக்கான காசோலைகளை கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர் வழங்கினர். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் மற்றும் அதிகாரிகள் உடன் உள்ளனர்.

## திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழக கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மைப்

# பட்டயப்படிப்பு மாணவர்களால் தமிழர்களின் தொன்மை கண்டுபிடிப்பு !

## பேராசிரியர் ச.இரவி தகவல்!

திருவாரூர், செப்.30-

திருவாரூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கித்தரப்பட்ட திருவாரூர் மத்திய பல்கலைக் கழகத்தில் தொல்லுயிர் புதைபடிம ஆராய்ச்சியில் கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மைப் பட்டயப்படிப்பு மாணவர்கள் ஈடுபட்டு அரிய ஆதாரங்களையு திரட்டி தமிழரின் தொன்மைகளை ஆய்வுக்கு கண்டு பிடித்துள்ளனர்.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம் சமுதாயக் கல்லூரியின் கீழ் இயங்கும் கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மைப் பட்டயப்படிப்பைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மற்றும் , கல்வெட்டியல் பட்டயப்படிப்புப் பொறுப்பாசிரியர் பேரா.ச.இரவி மற்றும் பா. அருண் ராஜ், கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மைப்பேராசிரியர் இவர்கள் வழிகாட்டுதலில் அரியலூர், பெரம்பலூர் மாவட்டத் தொல்லுயிர் புதைபடிம மேற்பரப்பாய்வில் ஈடுபட்டனர். கீழப் பழுவூர், வாரணவாசியில் உள்ள அருங்காட்சியகப் பகுதியில் முதலில் தங்களுடைய மேற் பரப்பாய்வை மேற்கொண்டனர்.

மேற்பரப்பாய்வில் இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இடைக்கற்காலக் கருவிகள், இரும்புக் கருவிகள் தயாரிக்கின்ற பொழுது கிடைக்கப் பெற்ற இரும்புக்கசடுகள் மற்றும் 15 கோடி ஆண்டுகளுக்கு முன்பு கடல் பகுதியாக இருந்த இந்தப் பகுதியில் தொல்லுயிர் படிமங்கள் இருந்ததற்கான தடயங்களைக் கண்டறிந்தனர்.

அரியலூர் தமிழ்நாடு அரசு சிமெண்ட் ஆலை உள்ள கள்ளக்குறிச்சி சாலைப் பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்ட போது நூற்றுக்கணக்கான கிளிஞ்சல்கள், கடல் நத்தைகள், சுறா மீனின் தாடைப் பற்கள், சிப்பிகள், சங்குகள் மற்றும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கடல்வாழ் உயிர்களின் புதை படிமங்களைக் கண்டறிந்தனர். இந்தப் பகுதி பதினைந்து கோடி ஆண்டுகளுக்கு முன்பு சிப்பிகள் கூட்டம் கூட்டமாக இருந்த இடமாகக் கண்டறியப்பட்டது.

ஏற்கனவே இந்த மாவட்டங்களில் ஜுராசிக் கால 'டைனோசார்' மற்றும் 'டைனோசார் முட்டைகள்' மற்றும் கிரிட்டேசியஸ் கால 'அமோனைட்' உயிர் புதை படிமங்கள் கண்டறியப்பட்டன. இந்தப் பகுதி 'தொல்லுயிர் விலங்கு களின் பூங்கா' என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

இதை அடுத்துப் 'புவியியல் ஆய்வாளர்களின் மெக்கா' என்று அழைக்கப்படுகின்ற பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 'சாத்தனூர் 'தொல்புதை படிமங்களின் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.இதில் உலகிலேயே மிக உயரமாகக்(90அடி) கிடைக்கப்பெற்ற கல்மரம் மற்றும் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்ற கடல்வாழ் தொல்லுயிர் படிமங்கள் எவ்வாறு கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு கல் படிமமாக மாறியது என்பது பற்றிய ஆய்வு நிகழ்த்தப் பட்டது. இதுபோன்று இன்னும் ஏராளமான கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லுயிர் புதைபடி மங்களை ஆய்வு செய்தால் அவற்றைக் கண்டறிய முடியும் என்பதற்கான அறிகுறிகள், தடயங்கள் இருப்பதைக் கண்டறிந்தனர். இந்த ஆய்வுகள் இன்னும் தொடக்க நிலையில் தான் இருக்கின்றன.மேலும் இந்தப் பகுதிகளை ஆய்வுக்கு உட்படுத்துகின்ற பொழுது தொன்மையான டைனோசார், அமோனைட், கல்மரம், பூவாத் தாவரங்கள் இவை போன்ற ஆயிரக்கணக்கான தொல்லுயிர் புதைபடிமங்களைக் கண்டறிய முடியும். இவை பற்றிய ஆய்வை மேலை நாட்டினர் முன்னெடுத்துச் செல்லுகின்ற ஆர்வம் போல் நம்மிடம் இன்னும் அதிகரிக்க வேண்டும். இந்தத் தொல்லுயிர் புதைபடிமங்கள் ஆகிய பொக்கிஷங்களை, 13க்கும் மேற்பட்ட சிமெண்ட் தயாரிப்பதற்குப் பயன்படுத்துகிற சுண்ணாம்புக்கல் எடுக்கும்பொது அழியாமல் பாதுகாக்க வேண்டும் இவ்வாறு பேராசிரியர் ச.இரவி தெரிவித்துள்ளார்.

## குன்றாண்டார் கோவில் ஒன்றிய முன்னாள் செயலாளர்

# கழக முன்னோடி க.ரெங்கராசு மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.30-

கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், குன்றாண்டார் கோவில் ஒன்றிய கழக முன்னாள் செயலாளரும், குன்றாண்டார் கோவில் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவரும், அண்டக்குளம் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவரும். அண்டக்குளம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவருமான கழக மூத்த முன்னோடி க.ரெங்கராசு அவர்கள் நேற்று (28.09.2025) நண்பகல் 12 மணியளவில் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் க.ரெங்கராசு அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.




தாம்பரம் சென்னை கிறித்தவக் கல்லூரியில் நேற்று (29.9.2025) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக தாட்கோ நடத்தும் தொழில் முனைவோருக்கான தொழில் வாய்ப்புகளை விரிவுப்படுத்தும் நிகழ்ச்சியினை தாட்கோ தலைவர் நா.இளையராஜா தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு. கந்தசாமி, எம்.ஆர்.எப் புத்தாக்கப் பூங்கா தலைமை செயல்பாட்டாளர் முனைவர். சி.ஆர்தி ராம், தாட்கோ பொது மேலாளர் (திட்டம்) என். சீனிவாசன், தொழில் முனைவோர்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் மாவட்ட வேளாண்மைத் துறை சார்பில் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டம் மற்றும் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சி திண்டிவனத்தில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., கலந்துகொண்டு சிறப்புரையாற்றி விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்கினார்.உடன் வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன், துணை இயக்குனர் குமாரி ஆனந்தி, மாவட்ட துணை சேர்மன் ஷீலா தேவி, சேரன்,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், மரக்காணம் ஒன்றிய துணைச் சேர்மன் பழனி உள்ளிட்ட வேளாண்மைத் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.